சுருக்கம்

காதி நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம் – உறுப்பினர்களுக்கு நல உதவிகள் – உறுப்பினர்கள் ஓய்வூதியம் ரூ.400/–லிருந்து ரூ.1,000/–ஆக உயர்த்தி வழங்குவது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (எப் 2) துறை

அரசாணை (நிலை) எண்.143

நாள் : 14.11.2011
ஐப்பசி 28
திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்க :-

1. அரசாணை (நிலை) எண்.120, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (எப்2) துறை, நாள் 26.8.2010
2. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய தலைமைச் செயல் அலுவலர் அவர்களின் கடிதம் எண்.16733/கே6/2010, நாள் 7.9.2011
3. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய தலைமைச் செயல் அலுவலர் அவர்களின் கடிதம் எண்.16733/கே6/2010, நாள் 18.10.2011

–––––

ஆணை :

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், காதி நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு அந்நலவாரியத்தில் பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு நல உதவிகள் வழங்குவதற்காகவும், இது தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்காகவும் ரூபாய் 50,00,000/– அனுமதித்தும், நல உதவித் திட்டங்களுக்கான நிதியினை தேவைக்கேற்ப மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யவும்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய தலைமைச் செயல் அலுவலருக்கு அதிகாரம் அளித்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும், நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகளில் ஒன்றான முதியோர் ஓய்வூதியம், மாதந்தோறும் ரூ.400/– வழங்கப்படும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. 2011–2012ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை எண்.18–ல் மாண்புமிகு அமைச்சர் (கதர் மற்றும் கிராமத் தொழில்கள்) அவர்கள், பின்வரும் அறிவிப்பினை சட்டமன்றப் பேரவையில் 14.9.2011 அன்று அறிவித்தார்.

“தமிழ்நாடு நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியத்தின் உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை ரூ.400/– லிருந்து ரூ.1,000/–ஆக உயர்த்தி வழங்கப்படும்.”

3. மேலே இரண்டு மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், காதி நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நலவாரியத்திற்கு 2010–2011ஆம் ஆண்டில் ரூ.50.00 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்றும், இதில் ரூ.1,78,500/– செலவு செய்யப்பட்டுள்ளது என்றும், 2011–2012ஆம் ஆண்டிற்கு ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், இந்நலவாரியத்தில், சுமார் 9041 நபர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். எனவே, மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, காதி நூல் நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ.400/– லிருந்து ரூ.1,000/–ஆக உயர்த்தி வழங்குமாறு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத் தலைமைச் செயல் அலுவலர் அரசிடம் கோரியிருந்தார்.

4. 2011–2012ஆம் ஆண்டுக்கான மேற்கண்ட அறிவிப்பினை நடைமுறைப்படுத்தும் வகையில், தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அவர்களின் கோரிக்கையை அரசு நன்கு பரிசீலனை செய்த பின்னர், “காதி நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியத்தின்“ உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் முதியோர் ஓய்வூதியத் தொகையை ரூ.400/–லிருந்து ரூ.1,000/–ஆக உயர்த்தி வழங்கவும், அதனால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை 2011–2012ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.50.00 இலட்சம் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படின் அதனை பின்னர் அனுமதிக்கலாம் என்றும் அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

5. இந்த ஆணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.57117/தொழில்/ 2011, நாள் 9.11.2011–ன்படி இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி.முத்துக்குமாரசாமி
அரசு செயலாளர்

பெறுநர்
தலைமைச் செயல் அலுவலர்,
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், குறளகம், சென்னை–108.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அரசு செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், வருவாய்த்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், சமூகநலம் மற்றும் சத்துணவுத்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், பள்ளிக்கல்வித் துறை, சென்னை–9.
இயக்குநர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–6.
முதலமைச்சரின் செயலர், சென்னை–9.
மாநில கணக்காயர் , சென்னை–18/ 35.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு /தெற்கு ) சென்னை–1/35
நிதி (வரவு–செலவு பொது.I,II/வருவாய்/பள்ளிக்கல்வி/பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்) துறைகள், சென்னை–9.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலரின் தனிச்செயலர், சென்னை–9.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளரின்
தனிச் செயலர், சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை–9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

அரசு துணைச் செயலாளர்